**சுருக்கம்**

வேளாண்மை - உழவர் நலன் - சிறப்பு விருது - 2021 - 22 - நெல் சாகுபடியில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைப்பிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு குடியரசுத் தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் "திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது" மற்றும் பரிசு வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.4) துறை**

அரசாணை (நிலை) எண். 9

நாள் :13.01.2023
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம், மார்கழி 29
படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.246, வேளாண்மை (வே.உ_4) துறை, நாள் 21.12.2011.
2. அரசாணை (நிலை) எண்.233, வேளாண்மை (வே.உ_4) துறை, நாள் 17.09.2018.
3. அரசாணை (நிலை) எண்.01, வேளாண்மை (வே.உ_4) துறை, நாள் 04.01.2021.
4. அரசாணை (2டி) எண்.03, வேளாண்மை (வே.உ_4) துறை, நாள் 04.01.2021.
5. அரசாணை (நிலை) எண்.13, வேளாண்மை-உழவர் நலத் (வே.உ_4) துறை, நாள் 13.01.2022.
6. வேளாண்மை இயக்குநரின் கடித எண். நெ&சி3/63520/2021, நாள் 17.10.2022 & 20.12.2022.

*****

**ஆணை**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், நவீன தொழில் நுட்பத்துடன் செயல்படுத்தப்படும் திருந்திய நெல் சாகுபடி முறைக்கு அதிக ஊக்கம் அளிக்கும் வகையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2011 - 2012 - ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, நெல் சாகுபடியில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினைக் கடைப்பிடித்து, மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு, ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சிறப்பு பரிசுத் தொகை ரூ.5.00 இலட்சம் (Special Award) மற்றும் ரூ.3,500/- மதிப்புடைய வெள்ளிப் பதக்கம் வழங்கவும், பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தும் ஆணை வெளியிடப்பட்டு, 2011 – 2012 முதல் குடியரசு தின விழாவில் விருதும், பரிசும் வழங்கப்பட்டு வருகிறது.

(த.பி.பா)

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை கடைப்பிடித்து, மாநில அளவில் நடைபெறும் பயிர் விளைச்சல் போட்டிக்கான கடைசி தேதியை மார்ச் 31-இல் இருந்து ஏப்ரல் 15-ஆம் நாள் வரை நீட்டித்தும், தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் தயார் செய்திட ஒதுக்கப்பட்டு வரும் நிதியினை ரூ.3,500/-க்கு பதிலாக, ரூ.5,000/-ஆக உயர்த்தி வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 21.12.2020 நாளிட்ட அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு விவசாயிகளை ஒருங்கிணைத்து, விவசாயிகளின் ஒப்பற்ற தலைவராக திகழ்ந்த திரு. சி. நாராயணசாமி நாயுடு அவர்களின் சிறந்த சேவையினை போற்றி பாராட்டும் வகையில் 2020-21-ஆம் ஆண்டிலிருந்து இவ்விருது, "திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது" என்ற பெயரில் வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மற்றவற்றிற்கிடையில் தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப்பதக்கம் தயார் செய்வதற்காக ஒதுக்கப்பட்டு வரும் நிதியினை ரூ.5,000/-இல் இருந்து ரூ.7,000/- ஆக உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

5. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2020-2021-ஆம் ஆண்டு நெல் சாகுபடியில், மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில் CR 1009 ரகம் சாகுபடி செய்து, எக்டருக்கு 13,800 கிலோ மகசூல் எடுத்த, திரு. செ. இராமசாமி, சேலம் மாவட்டம் என்பவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 2022 - ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில் "திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது", ரூ.5 இலட்சம் சிறப்புப் பரிசு மற்றும் ரூ.7,000/- மதிப்புடைய பதக்கம் வழங்க அனுமதியும், அதற்கான பயணப்படி செலவினம் ரூ.6,000/- உட்பட, மொத்தம் ரூ.5,13,000/-க்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது

6. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைப்பிடித்து, 2021-2022-ஆம் ஆண்டில், மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில், மாநில அளவில் CR 1009 ரகம் சாகுபடி செய்து, அதிகபட்சமாக எக்டருக்கு 14,451.25 கி.கி மகசூல் எடுத்துள்ள திருமதி. க. வசந்தா, க/பெ திரு. கணேசன், ஆலவயல் கிராமம், பொன்னமராவதி வட்டாரம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களை மேற்படி விருதுக்கு பரிந்துரை செய்தும், அரசாணையில் தெரிவித்தபடி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2023 - ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில் "திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது", ரூ.5 இலட்சம் சிறப்புப் பரிசு மற்றும் ரூ.7,000/- மதிப்புடைய பதக்கம் ஆகியவற்றை வழங்க அனுமதியும், மேலும், பயணப்படி செலவு ரூ.16,000/- உட்பட, மொத்தம் ரூ.5,23,000/--க்கு (பரிசு தொகை ரூ.5.00 இலட்சம் + பதக்கம் ரூ.7,000 + பயணப்படி ரூ.16,000/-) நிதி ஒப்பளிப்பு செய்திடவும், வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை மதிப்பீடு செய்ய அதிகாரம் வழங்கவும், கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக நியமிக்கவும் மற்றும் பயணப்படி செலவினத் தொகையினை வேளாண்மை இயக்குநர் மற்றும் சம்பந்தப்பட்ட வேளாண்மை இணை இயக்குநருக்கு முன்பணமாக வழங்க அதிகாரம் வழங்கவும் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(த.பி.பா)

7. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினைக் கடைப்பிடித்து 2021-22-ஆம் ஆண்டில் நெல் சாகுபடியில், மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி பயிர்விளைச்சல் போட்டியில் CR 1009 ரகம் சாகுபடி செய்து, அதிகபட்சமாக எக்டருக்கு 14,451.25 கி.கி மகசூல் எடுத்துள்ள திருமதி. க. வசந்தா, க/பெ. கணேசன், ஆலவயல் கிராமம், பொன்னமராவதி வட்டாரம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 2023 - ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில் "திரு.சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது" , ரூ.5,00,000/- சிறப்புப் பரிசு மற்றும் ரூ.7,000/- மதிப்புடைய பதக்கம், ஆகியவற்றை வழங்க அனுமதியும், அதற்கான பயணப்படி செலவினம் ரூ.6,000/- உட்பட, மொத்தம் ரூ.5,13,000-க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து பதிமூன்றாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி 7-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2401-00 பயிர் வளர்ப்பு – 109 விரிவாக்கப் பணியும் உழவர் பயிற்சியும் – மாநிலச் செலவினங்கள் - KI – திருந்திய முறை நெல் பயிரிடுதலில் மிக அதிகமாக நெல் விளைச்சலை ஈட்டும் விவசாயிக்கு சிறப்பு விருது வழங்குதல்".

| | | |
|---|---|---|
| (i) | 304 பயணச் செலவுகள் – 01 – சுற்றுப் பயணப்படிகள்<br>(து.தொ.கு: 2401-00-109 KI-30401) | ரூ.6,000/- |
| (ii) | 395 பரிசுகளும் வெகுமதிகளும் – 01 பரிசுகளும் வெகுமதிகளும்<br>(து.தொ.கு: 2401-00-109 KI-35901) | ரூ.5,07,000/- |
| | **மொத்தம்** | **ரூ.5,13,000/-** |

9. மேலே பத்தி 7-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

10. திருந்திய நெல் பயிர் சாகுபடி விளைச்சல் போட்டியில் அடுத்த நிதியாண்டு முதல் சன்ன இரகங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் எனவும், கடந்த மூன்று ஆண்டுகளில் அதிக விளைச்சல் பெற்றமைக்காக உரிய மதிப்பீடு (weightage) முறையினை செயல்படுத்த வேண்டும் எனவும், அதற்கான தக்க வழிமுறைகளை வகுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேளாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. இவ்வாணை, நிதித் துறையின் அ.சா.கு. எண். 1007308, நிதி (வேளாண்மை - உழவர் நலன்) துறை, நாள் 02.01.2023-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை-5.

திருமதி. க. வசந்தா, க/பெ. கணேசன், ஆலவயல் கிராமம்,
பொன்னமராவதி வட்டாரம், புதுக்கோட்டை மாவட்டம்.
(வேளாண்மை இயக்குநர் மூலமாக)
மாநில முதன்மைக் கணக்காயர் (G&SSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள். (வேளாண்மை இயக்குநர் மூலமாக)
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம்
(சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை-9.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மை செயலாளர்-III, சென்னை-9.
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் முதுநிலை
தனிச்செயலர், சென்னை-9.
நிதித் (வேளாண்மை - உழவர் நலன்) துறை, சென்னை-9.
பொதுத் துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (பொது/வ&தி) துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு3) துறை, சென்னை-9. (2 நகல்கள்)
(அட்டவணைப்படுத்தும் வகைக்கு).
உதவி நிரலர், வேளாண்மை - உழவர் நலத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்